1984 பிப்ரவரி 20]

படாமல் கேட்பாரற்று கிடக்கின்றன. அவைகள் எல்லாம் வீணாகப் போகக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. எனவே இவைகளை எல்லாம் எடுத்து, அரசின் சார்பிலே ஏலம் போட்டு, அரசுக்கு வருவாய் வரக்கூடிய வகையில் அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜசேகரன் அவர்களும், இளையபெருமாள் அவர்களும் சென்னை நகரிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரம்ப தகவல்களைக் கொடுக்கவேண்டும் என்று தான் நான் ஆசைப்படுகிறேன். எல்லாவிதமான தகவல்களையும், எத்தனை குழாய்கள் போடப்பட்டன, எவ்வளவு லாரிகள் ஓட்டப்பட்டன, எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது, போன்ற விவரங்களைத் தருவதற்கு, ஒரு அவசர கால வினாவாகப் போட்டால்கூட (குறுக்கீடு) தனிக்கேள்வியாக போட்டால் கூட பதில் தர தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும், உறுப்பினர் இளையபெருமாள் கேட்ட கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

சென்னையிலுள்ள விம்கோ தொழிற்சாலை நிறுவனம்.

94—(*வினா எண். 20119)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விம்கோ தொழிற்சாலை (WIMCO LIMITED) நிறுவனத்தினர் அடிக்கடி தொழிற்சாலையை மூடி வருவதன் காரணமாக அரசு தலையிட வேண்டி மேற்படி தொழிற்சங்கத் தலைவரிடமிருந்து அரசுக்கு மனு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சென்னையிலுள்ள விம்கோ தொழிற்சாலை நிர்வாகம் தங்கள் நிறுவனத்தை மூடிவிடுவதாக இதுவரை எந்தவித முன்னறிவிப்பும் கொடுக்கவில்லை. மூடுதல் குறித்து நேரடியாக எந்தவித தொழிற்தகராறும் இந்த துறை முன் எந்த ஒரு தொழிற்சங்கத்தின் மூலமும் எழுப்பப்படவில்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

1982–83 ஆம் நிதியாண்டில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் விற்பனை செய்த துணிகளின் மதிப்பு.

95—(* வினா எண் 18453)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—